டிரேடிங் கார்ப்பரேஷன் நம்முடைய தலைமுடியை வாங்குவதை நிறுத்தி விட்டார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளாக தலைமுடி விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடந்தது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் அதை ஒட்டு மொத்தமாக சில நபர்களுக்கு ஏலத்தில் விடப்பட்டு, விற்பனை செய்யப்பட்டது. அந்த விற்பனை குறைவாக இருக்கிறது என்றாலும், அந்த விற்பனையை முறைப் படுத்தவேண்டுமென்பதற்காக திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இந்தத் திருத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974) சட்ட மாக நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஈ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1974.)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (இரண் டாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

---

* 9—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட சமய நிறுவனங்களில் அறங்காவலர்கள் அந்த நிறுவனங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதற்காக அவற்றைக் கொணர வேண்டுமென்று தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 87-வது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவு வகை செய்கிறது. ஆயினும், கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குக் கொண்டு வந்து காட்டுவதற்கு காலவரையறை எதுவும் நிச்சயிக்கப்படவில்லை.

கணக்குகளைக் கொண்டு வந்து காண்பிப்பதற்கு சட்டப்படி காலவரையறை எதுவும் நிச்சயிக்கப்படாததை ஒரு சில அறங்காவலர்கள் பயன்படுத்திக் கொண்டு கணக்குகளைக் கொண்டு வந்து காட்டக் காலதாமதம் செய்யலாம் அல்லது கொண்டு வந்து காட்டாமல் ஏய்க்கலாம் என்றும், எனவே கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காகக் கொண்டு வந்து காட்டுவதற்கு காலவரையறை நிச்சயிப்பது மிகவும் அவசியம் என்றும் கருதப்படுகிறது.

எனவே, கணக்குகள், பதிவேடுகள் முதலியவற்றை தணிக்கைக்காக தணிக்கையாளர்களுக்கு சமய நிறுவனத்தின் அறங்காவலர்கள் அனுப்புவதற்கான காலவரையறையை நிச்சயிப்பதற்காக விதிகள் இயற்ற அதிகாரம் மேற்கொள்ளும் பொருட்டு, மேற்படி சட்டத்தின் 87-வது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, "தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1974) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.